ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

# பாலர் இராமாயணம்.

முதலாம் புத்தகம்

## இரண்டாம் புத்தகம்.


சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர்

கலாசாலைத் தமிழ்ப் புலவராகிய

எஸ். எஸ் அருணகிரிநாதர்

எழுதியது.



மதுரை புத்தக வியாபாரம்,

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்

வெளியிட்டது.


Right Reserved.] 1931. [விலை அணா 3.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# பாலர் இராமாயணம்.

## இரண்டாம் புத்தகம்.

சென்னைத் தொண்டைமண்டலம் துளுவ வேளாளர்
கலாசாலைத் தமிழ்ப் புலவராகிய
**எஸ். எஸ். அருணகிரிநாதர்**
எழுதியது.

மதுரை புத்தக வியாபாரம்,
இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
வெளியிட்டது.

Right Reserved] **1931** [விலை அணா **3**

# முகவுரை

"பாலர் இராமாயணம்" என்னும் பெயரிய இச்சிறு புத்தகம் முதன் முதல் கல்வி கற்கப் புகும் சிறுவர் சிறுமி கள் தமிழ் எழுத்துக்களை அறிந்து இரண்டு எழுத்துக்களைக் கூட்டிப்படிக்க ஆரம்பித்த உடன் அவர்களுங்கூட எளிதில் படித்தறிந்துகொள்ளத்தக்க அவ்வளவு தெள்ளிய சிறு சொற்களின் அடுக்குத்தொடரில் கற்றோரே கரைகாணமுடி யாத ஸ்ரீ ராமாயண காவியத்தை ஒரு சிறிதுங்கூடக் கதைத் தொடர்பு வழுவாமல் தொகுத்தெழுதப் பெற்றுளது.

பொதுவாக ஆரம்பபாடப்பள்ளிக்கூடங்களில் சிறுவர் சிறுமிகளின் மனதில் இலகுவில் பதியும்படியான "கண் ணில்லாதவன் குருடன், காலில்லாதவன் முடவன்" என்ற வாக்கியங்களைக்கூடச் சிறிது கடினந்தான் என்று எண்ணு மாறு அத்தனை சாதாரணமாக இதிலுள்ள சொற்களும் சொற்றொடர்களும் அமைந்திருக்கின்றன. சுருங்கக் கூறில் "இது போன்ற சிறு சிறு வாக்கியங்களில் பெரிய நமது இந்துதேச சரித்திர இதிகாச புராணாதிகள் முழுதும் பல ஆயிரக்கணக்கில் வெளிவந்துகொண்டிருந்தாலுங் கூட அவைகள் அனைத்தும் நமது தேச பாஷையின் முன்னேற் றத்திற்கோர் அவசியந்தான்" என்பது எமது கருத்து.

இதனைக் கண்ணுறும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும தத்தம் கலாசாலைகளில் இதனை உப பாட புத் தகமாக வைத்து ஆதரித்து வந்தால் அது பாஷா விர்த் திக்கே ஓர் அநுகூலமாமென்பது இந்நூலாசிரியரின் கருத்து,

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை.



## நூற்பயன்.

---

தந்தை வாக்கியம் தன்முடி தாங்கி
மூந்த ராகவன் முதுவன முற்றனன்
தமையன் வாக்கியம் தன்முடி தாங்கி,
சுமையெனப் பாதுகை சூடினன் பரதன்
இவர்கள் செய்கையில் எதனையாம் வியப்பதோ
அவர்கள் வாய்மையும் அன்பும் ஒழுக்கமும்
இன்று வரையும் இசைபெறு மாந்தர்க்கு
நின்று நிலவி நீதிகற் பிப்பன ஆதலான்,
பாலர்காள் இக்கதை படிப்பவர் உலகில்
சீலமும் செல்வமும் சிறந்து
தத்தம் கடமையில் தாம்மிளிர் வாரே.

இங்ஙனம்,
நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான், மதுரை.

# பாலர் இராமாயணம்

## இரண்டாம் பாகம்.

### 5. இராமர் இலட்சுமணர் கோபத்தை அடக்குதல்.

இராமரைக் கைகேசி காட்டுக்குப் போகச் சொல்லிய சமாச்சாரம் இராமருடைய தம்பியாகிய இலட்சுமணருக்குத் தெரிந்து விட்டது. அவருக்கு இராமரிடத்தில் அதிகப்பிரியம் அல்லவா! அதனால் 'இராமர் காட்டுக்குப் போகிறார்' என்பதைக் கேட்டவுடன் அவருக்கு மிகவும் கோபம் வந்து மூண்டுகொண்டது.

அதனால் அவர், 'மூத்தவராகிய இராமர் இருக்கையில் இளையவராகிய பரதருக்குப் பட்டங் கட்டுதல் எப்படிச்சரியாகும்! என் தந்தை தசரதருக்கு வயதாய்விட்டது. அதனால் அவருக்கு ஒன்றும் தெரியவில்லை! யார் வந்தாலும் சரி; அவர்களை ஒரு கை பார்க்கிறேன்; என் தமையன் இராமனையே அயோத்திக்கு அரசன் ஆக்குகிறேன்' என்று கையில் வில்லை எடுத்து நின்றார்.

இதை அறிந்த இராமர், இலட்சுமணர் இடம் வந்து, 'தம்பீ! உன்னோடு சண்டைபோட

யாரால் முடியும். நீ நினைத்தால் எல்லாம் ஆகும். ஆனால், நீ ஒருவரையும் கோபித்துக் கொள்ள வேண்டாம். நான் பதினான்கு வருஷம் காட்டுக்குப் போக ஒப்புக்கொண்டேன். அந்த எண்ணத்தை மாற்றமாட்டேன், தம்பி பரதன்மேல் உனக்குக் கோபம் வேண்டாம். அவன் மிகவும் நல்லவன். என் வார்த்தையைக் கேள்! கோபத்தைவிடு; பொறுமையைப்போற்று' என்றார்.

இராமர் இப்படிச் சொன்னதும் இலட்சுமணரின் கோபம் அடங்கி விட்டது.

---

## 6. சீதையின் துணிவு.

பிறகு இராமர் சீதை இருக்கும் இடத்திற்குப் போய் காட்டுக்குப் போகிற சமாச்சாரத்தைச் சொன்னார். அதைக்கேட்டதும் சீதைக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று.

ஆயினும் சீதா பிராட்டியார் வருத்தத்தை அடக்கிக்கொண்டு இராமரைப்பார்த்து. 'சுவாமீ! அப்படியானால், நானும் தங்களோடு காட்டுக்கு வருகிறேன்' என்று சொன்னார்.

இதைக்கேட்ட இராமர் சீதையைப்பார்த்துப் பெண்ணே! காடென்றால் என்ன, கஷ்டம் இல்லை என்று எண்ணிக்கொண்டாயா? காட்டில் வந்து உனக்குக் காலம் கழிக்க முடியாது. இங்கே

உள்ள சுகம் காட்டில் ஏது? காட்டில் உனக்கு மிருந்தகஷ்டம் உண்டாகும். ஆகையால் நீ இங் கேயே இரு' என்று சொன்னார்.

இதைக் கேட்ட சீதா பிராட்டியார் இராம ரைப் பார்த்து, 'சுவாமி! தாங்கள் இருக்கும் இடம் காடாய் இருந்தாலும் அதுதான் எனக்குச் சுவர்க்கம்! தாங்கள் இல்லாத இடம் நாடாய் இருந்தாலும் அது எனக்கு நரகம்! தாங்கள் என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்போது விட்டுப் பிரியமாட்டேன் என்று சொன்னீர்களே? இப்போது என்னை விட்டு விட்டு நீங்கள் மட் டும் காட்டுக்குப் போகலாமா? நானும் கூட வரு கிறேன் சுவாமி!' என்று வேண்டிக்கொண்டாள்.

பிறகு சீதையின் இஷ்டப்படி நடப்பதாக ஒப்புக்கொண்டார். இராமரும், சீதையும், இலட் சுமணரும், காட்டுக்குப்போகப் புறப்பட்டார்கள். அவர்கள் காட்டுக்குப் போவதில் ஒருவருக்கும் இஷ்டம் இல்லை. அதனால், அயோத்தியில் உள்ள எல்லோரும் துக்கப்பட்டார்கள்.

கைகேசி மட்டும் கொஞ்சமும் வருத்தப் படவே இல்லை. சுமித்திரையும். கௌசலையும், அடைந்த துக்கத்திற்கு அளவு கிடையாது. இராமர் அவர்களைப் பார்த்துத் "தாய்மார்களே! நீங்கள் துக்கப்பட வேண்டாம். பதினன்கு வரு

டங்களையும் காட்டில் பதினுன்கு நாட்களைப்போல் கழித்து விட்டு வருகிறோம்!" என்று தேறுதல் சொன்னார். என்னதான் தேறுதல் சொல்லியும் அவர்களுடைய துக்கம் குறைய வில்லை.

கடைசியாக இலட்சுமணரின் தாயாராகிய சுமித்திரா தேவி இலட்சுமணரைப் பார்த்து, 'கண்மணி! இலட்சுமணா! உன் தமயனாகிய இராமனை எப்போதும் விட்டுப் பிரியாதே! உன் தமயனும் அவனே! தெய்வமும் அவனே! தந்தையும் அவனே! என்று நீ எண்ணி அவனை நீ வணங்கு. அவன் இஷ்டப்படி நடந்துகொள்' என்று சொல்லி அனுப்பினார்.

அயோத்தியில் உள்ள ஜனங்களுக்கு இராமரை விட்டுப் பிரிந்திருக்க மனம் இல்லை. அதனால் அவர்கள் இராமரைப் பார்த்து, 'நாங்களும் உங்களோடு காட்டுக்கு வருகிறோம்' என்று சொன்னார்கள். இராமர் என்ன சமாதானம் சொல்லியும் அவர்கள் கேட்கவேயில்லை. அவர்கள் இராமரோடுகூடவே காட்டுக்குப் போனார்கள்.

அயோத்தி நகரம் முழுவதும் அழுகுரல் நிறைந்து இருந்தது. தசரதர் துக்கத்தால் மனம் வாடி மயக்கமாய் விழுந்து. 'இராமா! இராமா' என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

———

## 7. இராமரின் பிரிவும், தசரதரின்மரணமும்.

காட்டிற்குப் போனதும் இராமர் தம்மோடு வந்த ஜனங்களைத் திரும்பி அயோத்திக்குப் போய் விடச்சொன்னார். அவர்கள் இராமரைவிட்டுப் பிரிந்துபோக இஷ்டப்படவில்லை. இராமருக்கும் அவர்களைத் தம்மோடு அழைத்துக் கொண்டு போக இஷ்டம் இல்லை. அதனால் அவர் என்ன செய்கிறது என்று யோசித்தார். அது சமயம் அவருக்கு ஒரு யோஜனை வந்தது.

எல்லோரும் சரயுநதிக்கரையில் இராப்பொழுதைப் போக்கத் தங்கியிருந்தார்கள். நடு இராத்திரி; எல்லோரும் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அப்போது இராமர் ஒருவருக்கும் தெரியாதபடி சீதையையும், இலட்சுமணரையும் அழைத்துக்கொண்டு வெகுதூரம் போய்விட்டார். அங்கே குகனைக்கண்டு ஆறு கடந்து சித்திரகூட பர்வதம் என்னும் இடத்தில் போய்த் தங்கினார்.

பொழுது விடிந்தவுடன் ஜனங்கள் எழுந்து இராமரைப்பார்த்தார்கள். அவரைக்காண முடியவில்லை. அதனால் அவர்கள் துக்கப்பட்டுக் கொண்டே அயோத்திக்குத் திரும்பினார்கள்.

இராமர் அயோத்தியைவிட்டுக் காட்டுக்குப் போனவுடன் தசரதர் என்ன செய்கிறது என்று

தோன்றாமல் மிகவும் துன்பப் பட்டார். அந்தத் துன்பம் வரவர அவருக்கு அதிகம் ஆயிற்று. இரவும் பகலும் அவர் 'இராமா,இராமா' என்று சொல்லிக்கொண்டு அன்னந் தண்ணீர் இல்லாமல் அழுதுகொண்டு இருந்தார். கடைசியாக அவர் இராமரைப் பிரிந்த துக்கம் சகிக்க முடியாமல் இறந்துபோய் விட்டார்.

## 8. பரதர்பக்தி.

தசரதர் இறந்தவுடனே குல குருவாகிய வசிஷ்டர் அந்தச் சமாச்சாரத்தை பாட்டனார் வீட்டுக்குப் போயிருந்த பரதருக்கும், சத்ருக்னருக்கும் சொல்லி அனுப்பினர்.

தகப்பனார் இறந்த சமாச்சாரத்தைக் கேள்விப்பட்ட பரதரும், சத்ருக்னரும் உடனே புறப்பட்டு அயோத்திக்கு வந்து சேர்ந்தார்கள். அயோத்தியில் நடந்த எல்லா விஷயங்களும் பரதருக்குத் தெரிந்தது. அவருக்குத் தாங்கமுடியாத கோபம் வந்தது. உண்மையாகவே பரதருக்கு இராமரிடத்தில் அளவு கடந்த அன்பு.

தன் தகப்பனார் இறந்ததற்கும், இராமர் காட்டுக்குப் போனதற்கும் காரணம் தன்னுடைய தாயாராகிய கைகேசிதான் என்று தெரிந்தவுடன்

பரதர் என்ன செய்தார் தெரியுமா? கோபத்தோடு தன் தாயார் இடத்திற்குப் போனார். பரதரைக் கண்ட கைகேயி 'அப்பா மகனே! பரதா! நான் உன் தமையன் இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டேன். நீ அயோத்திக்கு இனிமேல் தடையில்லாமல் அரசன் ஆகலாம். உன் தந்தையின் எண்ணமும் அதுதான்' என்று சொன்னாள்.

அந்த வார்த்தை பரதருக்கு எரிகிற நெருப்பில் நெய்யை விட்டதுபோல் இருந்தது. அதனால் அவருடைய கோபம் அதிகம் ஆயிற்று. அப்போது அவர் தன் தாயாராகிய கொடிய கைகேசியைப் பார்த்து, 'ஆ! கொடியவளே! உன்னை நான் எனக்காக இராச்சியத்தைத் தேடி வைக்கச் சொன்னேனா? அடி பாவீ? தமையன் இருக்கும்போது தம்பி அரசாளலாமா? இது சரியா? என் தமையன், இராமன் எனக்குத் தெய்வம் போன்றவர் அல்லவா? என் தெய்வத்தை நீ காட்டுக்கு அனுப்பிய பிறகு எனக்கு நாட்டில் என்ன வேலை? பாவீ? என் தமையன் இராமன் உனக்கு என்ன கொடுமை செய்தார்? அவர் உன்னையும் தன்னுடைய தாயாரைப் போல் தானே பார்த்து வந்தார்! நீ என் தாய் அல்ல! நீ பேய்! கொடியவள்! உன் முகத்தில் விழிப்பதும் பாவமாகும்! என் தமையனைக்காட்டுக்குப்போ என்று சொன்ன உன் நாக்கை அறுத்து விடுவேன். என்

தமையனார் என்ன சொல்வாரோ என்று பயப்படுகிறேன். நீயே என் தந்தையைக் கொன்றாய்! தமையனைக் காட்டுக்கு அனுப்பினாய்? அயோத்தியிலுள்ளவர்களை அழும்படியுஞ் செய்தாய்! நீ விதவையானதோடும், என் அருமைத் தாய்மார்களாகிய சுமித்திரை தேவியையும்; கௌசலை தேவியையும் விதவையாக்கினாய்! அடி சண்டாளி! இனி உன் முகத்தில் விழிப்பதும் பாவம்!' என்று சொல்லிவிட்டு வெளியே போனார்.

வெளியே போன பரதர், கௌசலை தேவியைக்கண்டு, அவருடைய துக்கத்தையும், கோபத்தையும் தேறுதல் சொல்லிப் போக்கினார்.

பிறகு பரதர், 'நான் காட்டுக்குப் போய் என் தமையன் இராமனை அழைத்துவரப்போகிறேன்' என்று சொன்னார். எல்லோரும் பரதருடைய நல்ல குணத்திற்குச் சந்தோஷப்பட்டார்கள்.

உடனே பரதர், தம்மோடு கொஞ்சம் சேனைகளையும், குருவாகிய வசிஷ்டரையும், தமது தாய்மார்களையும் அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போனார். அங்கே இருந்த குகன் என்னும் பெயருடைய ஒருவர் பரதருக்கு இராமர் இருக்கும் இடத்தைச் சொன்னார்.

உடனே பரதர் இராமர் இருக்கும் இடத்திற்குப் போனார். போய் இராமர் காலில் விழுந்து,

அண்ணு! நான் இல்லாத சமயத்தில், என்னை விட்டுவிட்டு நீங்கள் காட்டுக்கு வந்துவிடலாமா! என் தாய் பொல்லாதவள்! நீங்கள் அயோத்திக்கு வந்து பட்டங் கட்டிக்கொண்டு அரசாளவேண்டும்' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். தம்பியாகிய பரதருடைய நல்ல குணத்தைக் கண்டு இராமர் சந்தோஷம் அடைந்தார்.

ஆனுலும் அவர் பரதரைப்பார்த்து, 'தம்பி பரதா! நீ நல்ல குணம் உடையவன்! உன்னைப் போல ஒரு நல்ல தம்மியாருக்குக்கிடைக்கக்கூடும்! நான் தாய் தந்தையர் வாக்குப்படி "பதினன்கு வருஷம் காட்டில் காலம் கழித்து வருகிறேன்" என்று சொல்லிவந்தேன். நான் இப்போது அயோத்திக்கு வந்தால் பொய்யன் ஆவேன். தம்பீ பரதா! நான் சொல்வதைக் கேள். நீ போய் அயோத்தியில் இருந்து நகரத்தைப் பாது காத்துக்கொண்டு இரு. நான் பதினன்கு வருஷம் ஆனதும் வருகிறேன்' என்று சொன்னுர்.

அதைக்கேட்ட பரதர் இராமரைப்பார்த்து, "அண்ணு! எனக்கு நீங்கள் இல்லாத இடத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. தமையன் இருக்கையில் தம்பி அரசாளலாமா? போகட்டும்; எது எப்படி இருப்பினும் நான் உங்கள் வார்த்தையைத்தடுக்க மாட்டேன். ஆனுலும், அண்ணு! தாங்கள் உட்கார வேண்டிய சிம்ஹாசனத்தில் நான் உட்கார

மாட்டேன், ஆகையால் நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். உங்களுடைய கால்களிலுள்ள பாதுகைகளை என்னிடம் கொடுங்கள். நான் அதைச் சிம்ஹாசனத்தில் வைத்து அதற்கு முடி சூட்டி, அதைத் தங்களைப் போல் பாவித்து, வணங்கி, நான் ஜனங்களைக் காத்து வருகிறேன். நீங்கள் பதினன்கு வருடம் ஆனதும் வந்து விடவேண்டும். இல்லா விட்டால் நான் என் உயிரை விட்டு விடுவேன்; இது சத்தியம்' என்று சொன்னார்.

தம்பி இப்படிச் சொன்னவுடன் இராமருடைய சந்தோஷம் அதிகமாய் இருந்தது. உடனே இராமர் தம்முடைய பாதுகைகளைப் பரதரிடம் கொடுத்து, 'தம்பீ பரதா! நீ பயப்படாதே! நமது தகப்பனார் இறந்து போனதைக் குறித்தும் அதிகமாக விசனப்படாதே! உன் இஷ்டப்படி இந்தப் பாதுகைகளை எடுத்துக் கொண்டு போ! நான் பதினன்கு வருடங்கள் ஆனதும் வந்து விடுகிறேன்' என்று சொன்னார்.

பிறகு பரதர் முதல் எல்லோரும் இராமரை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் ஒருவாறு மனது தேறி அவரை விட்டுப் பிரிந்து சென்றார்கள்.

## 9. பாதுகா பட்டாபிஷேகம்.

அயோத்திக்குப் பரதர் போக வில்லை. இராமர் இல்லாமல் அயோத்திக்குப் போவதில் அவருக்கு இஷ்டம் இல்லை. அதனால் அவர் அயோத்திக்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு சிறு கிராமமாகிய நந்திக் கிராமத்தில் வந்து தங்கினார்.

அங்கே அவர் வசிஷ்டர் முதலிய பெரியோர்களை வைத்துக் கொண்டு, இராமருடைய பாதுகைகளைச் சிம்ஹாசனத்தில் வைத்து அவைகளுக்கு முடி சூட்டினார். பிறகு அவர் அந்தப் பாதுகைகளைத் தம்முடைய தலைவனைப் போல் எண்ணி வணங்கி வந்தார். அதனால் ஜனங்கள் அவரை, அவருடைய நல்ல குணத்திற்காகக் கொண்டாடினார்கள். இராமர் சொன்னபடி பரதர் ஊரில் உள்ள ஜனங்களை நன்றாகக் காப்பாற்றி வந்தார். பிள்ளைகளே! பரதருடைய நல்ல குணத்தைப் பார்த்தீர்களா?

ஐந்தாம் அத்தியாயம்.

## 1. சூர்ப்பநகா பங்கம்.

பரதர் போன பிறகு இராமர், சீதையோடும் இலட்சுமணரோடும் பஞ்சவடி என்னும் இடத்

தில் வந்து தங்கி இருந்தார்கள். அங்கே அநேக இராட்சதர்கள் இருந்தார்கள். அவர்கள் தவம் செய்துகொண்டு இருக்கும் ரிஷிகளுக்கு எப்போதும் துன்பம் செய்துகொண்டே வந்தார்கள். அந்த இராட்சதர்களை யெல்லாம் இராமர் கொன்றுவிட்டார். அதனால் அந்த ரிஷிகளுக்கு இராமர் இடத்தில் அதிகப் பிரியம் உண்டாயிற்று. அவர்கள் இராமரை மிகவும் கொண்டாடினார்கள்.

ஒரு நாள் இராமர் இருந்த இடத்திற்குச் சூர்ப்பநகை என்னும் ஓர் இராட்சத ஸ்திரீ வந்தாள். அவள் அப்போது இலங்கை என்னும் ஊரில் இராஜாவாய் இருந்த இராவணன் என்னும் பெயர் உள்ளவனுடைய தங்கை. சூர்ப்பநகை இராமரைப் பார்த்தாள். அவர் அழகாய் இருந்தார். அதனால் அவள் அவரைக் கலியாணம் செய்துகொள்ள ஆசைப்பட்டாள். அதை அவள் இராமரிடம் சொன்னாள். இராமர் அவளைக் கலியாணம் செய்துகொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்.

அதன் பிறகு அவள் இராமருடைய தம்பியாகிய இலட்சுமணர் இடம் போனாள். அவரும் அழகாய் இருந்தார். அதனால் சூர்ப்பநகை இலட்சுமணரைப் பார்த்து, 'நீர் என்னைக் கலியாணம் செய்துகொள்ளும்' என்று வேண்டிக் கொண்டாள். அவர் இஷ்டப்படவில்லை. பிறகு

என்ன செய்கிறது என்று சூர்ப்பநகை ஆலோசனை செய்தாள். இராமரோடு இருக்கும் சீதையைத் தூக்கிக்கொண்டுபோய் கொன்றுவிட்டால் இராமர் தன்னைக் கலியாணம் செய்துகொள்ளுவார் என்று அவள் எண்ணினாள்.

அதனால் சூர்ப்பநகை மெதுவாகச் சீதையைத் தூக்கப்போனாள். அதைக் கண்டதே பிராட்டியாருக்குப் பயம் உண்டாயிற்று. உண்டாகவே பிராட்டியார் பயந்தார். அதைக் கண்டு இலட்சுமணருக்குக் கோபம் உண்டாயிற்று. அதனால் அவர் சூர்ப்பநகையின் மூக்கை அறுத்து அவளை அங்கே இருந்து துரத்தி விட்டார்.

## 2. கரதூஷணர்கள் வதம்.

சூர்ப்பநகைக்கு மூக்கு அறுபடவே அவளுக்குத் தாங்கமுடியாத வேதனை உண்டாயிற்று. உடனே அவள் கரன், தூஷணன் என்னும் பெயரினை உடைய இரண்டு கொடிய இராட்சதர் இடம் போய்த் தன் குறைகளையும், இராம லட்சுமணர் செயல்களையும் முறையிட்டுக் கொண்டாள். அவர்கள் கோபங்கொண்டு இராமரோடு சண்டைக்கு வந்தார்கள். அவர்களை இலட்சுமணர் ஒருவரே சுலபமாகக் கொன்றுவிட்டார்.

அதைக்கண்ட சூர்ப்பநகை திரிசிரர் என்னும் வேறு மூன்று இராட்சதர்கள் இடம் போய்த் தன் குறைகளைச் சொன்னாள்.

அவர்கள் மிகவும் கோபம் கொண்டார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு மலையைப் போலப் புறப்பட்டு வந்து இராமரோடும், இலட்சுமணரோடும் சண்டை செய்து மாண்டு போனார்கள்.

---

## 3. சூர்ப்பநகையும், இராவணனும்.

---

பிறகு சூர்ப்பநகை இலங்கையில் அரசனாய் இருக்கிற தன் தமையன் இராவணன் இடம்போனாள். போய் அவனைப் பார்த்து, "அண்ணா! நீ இருந்தும், கரன் முதலானவர்கள் இருந்தும் காட்டில் பரதேசிகளாய் இருக்கும் இரண்டு மனிதர்கள் என்னை இப்படிச் செய்து விட்டார்கள்! நான் என்ன செய்வேன்! என் மானம் போய் விட்டதே!" என்று சொல்லி அழுதாள்.

அவள் அழுவதையும். அவள் மூக்கு அறுபட்டு இருப்பதையும் கண்ட இராவணன் மிக்க கோபம் அடைந்தான். அதனால் அவன் சூர்ப்பநகையைப் பார்த்து, துடித்து, சூர்ப்பநகே! உன்னை யார் இப்படிச்செய்தது? எதற்காக இப்படிச்செய்தார்கள். என்று படபடத்துக்கேட்டான்.

அதற்குக் கொடியவளாகிய சூர்ப்பநகை இராவணனைப் பார்த்து; "அண்ணு! இராமன், இலட்சுமணன் என்னும் பெயர் உள்ள இரண்டு மனிதர்கள் பஞ்சவடியில் வந்து இருக்கிருர்கள். அவர்களைப்பார்த்தால் சாமானிய மனிதராகத் தெரியவில்லை. அவர்களை எதிர்க்க எவராலும் முடியாது என்று தோன்றுகிறது———"என்று சொல்லி, சூர்ப்பநகை அதற்குமேல் ஒன்றும் சொல்லாமல் வார்த்தையை நிறுத்திஞள்.

அதைக்கேட்ட இராவணன், சூர்ப்பநகையைப் பார்த்து. 'நல்லது தங்காய்! உன் மூக்கை அறுத்தவர்கள் யார்? அதற்குக் காரணம் என்ன?' என்று பரபரப்புடன் கேட்டான்.

உடனே சூர்ப்பநகை "அண்ணு! பஞ்சவடி தீரத்தில் இராம இலட்சுமணர்களை நான் கண்டேன். அவர்கள் யார் என்பதை அறிய அவர்களை நெருங்கினேன். ஆ! அண்ணு! நான் என்ன சொல்லுவேன்! அவர்களோடு ஒரு பெண் இருக்கின்ருள். அவள் இராமனுடைய பெண்சாதியாம். ஆ! நான் என்ன சொல்லுவேன்! அவளைப்போல் அழகுள்ள ஒருத்தி இந்த உலகத்தில் எங்கும் இருக்கமாட்டாள் என்று சொல்லலாம். அண்ணு! அவள் முகம் முழுச்சந்திரனைப்போல் இருக்கிறது. அவளுக்கு அந்த இராமன் தகுந்தவன் அல்ல. நீர் தான் அவளுக்குத் தகுந்த

வர். ஆகையால், அண்ணா! நான் அந்தச் சீதை யை உமக்காக இராம இலட்சுமணர்களுக்குத் தெரியாமல் எடுத்துவரப் போனேன். அதை அந்த துஷ்டனாகிய இலட்சுமணன் பார்த்துவிட்டான். உடனே அவன் என்மூக்கை அறுத்து அவமானம் பண்ணித் துரத்திவிட்டான்'' என்று சொன்னாள்.

மறுபடியும் அவள் இராவணனைப் பார்த்து, அண்ணா! என்மூக்குப் போனால் போகிறது. நீர் மாத்திரம் அந்தச் சீதையைக் கொண்டு வந்து மனைவியாக வைத்துக் கொண்டால் போதும். நீர் இராம இலட்சுமணர்களைக் கொன்று சீதை யைக் கொண்டுவர முடியாது. ஆகையால் ஏதாவது தந்திரம் செய்து அவளைக் கொண்டு வந்து விடும்' என்று சொல்லிப் போய் விட்டாள்.

சூர்ப்பநகை போனபிறகு இராவணனுக்குச் சீதைமேல் அதிகப்பிரியம் உண்டாயிற்று. அதனால் அவன் 'சீதையை எப்படியாவது கொண்டு வந்துவிடவேண்டும்' என்று தீர்மானித்தான்.

உடனே அவன் மாரீசன் என்னும் இராட்சதனைக் கூப்பிட்டு அவனைப்பார்த்து, 'மாரீசா! பஞ்சவடி என்னும் இடத்தில் இராமர், இலட்சுமணர், என்பவர்கள் சீதை என்னும் ஒரு ஸ்திரீயோடு வந்து தங்கி இருக்கிறார்கள். நான் சீதையைக் கொண்டு வந்து விடவேண்டும். ஆகையால் நீ ஒரு பொன்மான்போல் வடிவுகொண்டு,

சீதையின் முன்னால் போ. உன்னைப் பிடித்துத் தரும்படி சீதை சொல்லுவாள். இராமரும் இலட்சுமணரும் உன்னைப் பிடிக்க உன் பின்னால் வருவார்கள். அப்போது சீதை தனியே இருப்பாள். நான் அவளைத் தூக்கிக்கொண்டு வந்து விடுகிறேன். ஆகையால் மாரீசா! நீ உடனே நான் சொன்னபடி செய்! சீக்கிரம்' என்றான்.

மாரீசன் 'அப்படிச்செய்ய வேண்டாம்' என்றான். இராவணன் நீ போகமாட்டாயா? என்று கோபித்தான். மாரீசனுக்கு இராவணன் இடத்தில் மிகவும் பயம் உண்டு. அதனால் அவன் இராவணன் இஷ்டப்படி நடந்து கொள்ளுவதாகச் சொல்லி விட்டுப் போய் விட்டான்.

## 4. இராமரும், இலட்சுமணரும் பிரிதல்.

பஞ்சவடியில் பன்னசாலை அருகே சீதையும், இராமரும் உல்லாசமாகப் பேசிக்கொண்டு இருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் சிறிது தூலையில் இலட்சுமணர் நின்றுகொண்டு இருந்தார்.

அப்போது ஒரு பொன் மான் அங்கே வந்தது. அது பார்வைக்குப் பள பள வென்று அழகாய் இருந்தது. அதைக்கண்ட சீதாபிராட்டியாருக்கு அதைப் பிடித்து அதனோடு விலை

யாட வேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று, பிடிக்க முயன்றார். ஆனால் அந்த மான் சீதா பிராட்டியாரின் கையில் அகப்படவில்லை.

அதனால் சீதாபிராட்டியார் அந்த மானைப் பிடித்துத் தரும்படி இராமரைக் கேட்டார். அப் போது இலட்சுமணர், "அந்த மான் வேண்டாம். அதில் ஏதோ சூது இருக்கிறது" என்று சொன் னார். அவர் வார்த்தையைச் சீதை கேட்கவில்லை. அதனால் அந்த மானைக் கருதி இராமர் வில் லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு அதைப் பிடிப்பதற்கு அதன் பின்னே சென்றார்.

மான் வெகு தூரம் ஓடியது. அது 'கைக்கு அகப்படாது' என்று இராமருக்குத் தெரிந்தது. உடனே அவர் வில்லில் ஒரு அம்பை வைத்து அந்த மானை அடித்தார். அந்த அடி பட்ட வுடன் அந்த மாரீசனை மாயமான், 'சீதா இலட் சுமணா' என்று பலமாகக் கூவிக்கொண்டே தரை யில் விழுந்து செத்துப்போயிற்று.

மாயமான், 'சீதா இலட்சுமணா' என்று கூவிய சத்தம் சீதையின் காதிற் பட்டது. அத னால் சீதாபிராட்டியார் "இராமருக்குத்தான் ஏதோ ஆபத்து வந்துவிட்டது; இராமர்தான் அப்படிக் கூவினார்" என்று நினைத்துக்கொண்டார். அத னால் சீதைக்குப் பயமும் துக்கமும் உண்டாயிற்று.

ஆகையால் சீதா தேவி இலட்சுமணரைப் பார்த்து, "மானின் பின் சென்ற உமது தமயனுருக்கு ஏதோ ஆபத்து வந்து விட்டது போலத் தெரிகிறது. இப்போது அவர், 'சீதா இலட்சுமணு' என்றுரே! அந்தச் சத்தம் உமது காதில் விழவில்லையோ? நீர் சீக்கிரம் சென்று உமது தமையனுருக்கு என்ன ஆபத்து வந்தது என்று பார்த்து வாரும். இப்பொழுதே செல்லும்" என்று பரபரப்போடு சொன்னுர்.

அதற்கு இலட்சுமணர் சீதையைப்பார்த்து, 'அம்மணி! என் தமையன் இராமனுக்கு ஒரு காலத்திலும் ஆபத்து வராது. நீங்கள் பயப்பட வேண்டாம். இன்னும் கொஞ்ச நேரத்தில் என் தமையனுர் சுகமாகத் திரும்பி வருவார். பாருங்கள்' என்று மிகவும் சாந்தமாகக் கூறினுர்.

அவர் என்ன சொல்லியும் சீதை கேட்கவில்லை. அதனுல் அவர் சீதையைப் பர்ணகசாலையில் தனியே இருக்கும்படி விட்டுவிட்டு இராமரைப் பார்த்து வருவதற்குப் புறப்படலானுர்.

---

## 5. இராவணன் சீதையைக் கொண்டு போதல்.

---

இலட்சுமணர் போனதும், சீதை தனியே பர்ணகசாலையில் இருந்தார். அப்போது இராவ

ணன் ஒரு சந்நியாசியைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு, அங்கே வந்து சேர்ந்தான்.

வந்து, 'அம்மா! பசிக்கிறது; கொஞ்சம் பிச்சை போடுங்கள்' என்று கேட்டான்.

உடனே சீதை, அவன் பசிக்கு ஆகாரம் எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். சீதையின் அழகை இராவணன் கண்டான். அவனுக்குச் சீதையின்பேரில் பிரியம் உண்டாய்விட்டது.

பிறகு கொஞ்ச நேரம் ஆயிற்று. இராவண சந்நியாசி சீதையின் இடம் பேசத் தகாத வார்த்தையைப் பேசினான். அதனால் சீதைக்கு 'வந்து இருக்கிறவன் இராவணன்' என்று தெரிந்துவிட்டது. உடனே சீதாபிராட்டியார் பயந்தார்.

இராவணன் கொஞ்சமும் நிற்கவில்லை. சீதையைப் பர்னக சாலையோடு தூக்கித் தன் தேரின் மேல் வைத்துக்கொண்டு வேகமாய்ச் சென்றான்.

போகும்போது வழியில் அவன் சடாயு என்கிற பட்சியைச் சந்தித்தான். அதற்கு இராவணனுடைய கெட்ட காரியம் தெரிந்துவிட்டது. அதனால் அந்தப்பட்சி இராவணனை எதிர்த்தது. இராவணனைத் தன்னுடைய மூக்கினால் குதறிக் காயப் படுத்திவிட்டது. ஆனாலும், கடைசியாக இராவணன் சடாயுவை அதன் உயிர்ஸ்தானங்

கேட்டறிந்து அடித்துப் போட்டுவிட்டுச் சீதை யை இலங்கைக்கே கொண்டு போய்விட்டான்.

---

## 6. சடாயு தகனம்.

---

இலட்சுமணர் இராமரைத் தேடிக்கொண்டு போனூர் என்று முன்னரே சொன்னேன் அல்லவா? இலட்சுமணர் கொஞ்சதூரம் போனதும் இராமர் அவர் எதிரே வந்தார்.

இலட்சுமணர் இராமர் இடம் தாம் வந்த தற்குக் காரணம் இன்னதென்று சொன்னூர். பிறகு இராமரும் இலட்சுமணரும் அவசரமாகப் பர்ணக சாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கே சீதையைக் காணும். அதனால் அவர்கள் பயந்துபோனூர்கள். என்ன செய்கிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இராமர் அதிகமாகத் துக்கப்பட்டார்.

பிறகு இராமரும், இலட்சுமணரும் சீதையைத் தேடிக்கொண்டு போனூர்கள். வழியிலே அவர்கள் சடாயுப்பட்சியைக்கண்டார்கள். சடாயு அவர்களுக்குச் 'சீதா தேவியை இராவணன் தூக்கிக்கொண்டு போனூன்' என்று சொல்லிற்று. உடனே சடாயுவின் உயிர் போய்விட்டது. பின்

இராமரும், இலட்சுமணரும் சடாயுவைத் தகனம் செய்துவிட்டுச் சீதையைத் தேடிக்கொண்டு இலங்கை நோக்கிப் போனூர்கள்.

## 7. சுக்ரீவன் சிநேகமாகுதல்.

**பம்பாநதிக்** கரை ஓரத்தில் கிஷ்கிந்தை என்னும் ஒரு பட்டணம் இருந்தது. அந்தப் பட்டணத்தில் வாலி என்னும் பெயர் உள்ள ஓர் வானர இராஜா இருந்தான்.

அவன் தன் தம்பியாகிய **சுக்கிரீவன்** என்பவனை அடித்துத் துரத்திவிட்டான். சுக்கிரீவன் பக்கத்தில் இருந்த ரிஷியமுகம் என்னும் மலையில் போய்த்தங்கி இருந்தான். அவனுக்கு **அனுமான்** என்னும் ஒருவர் அன்பு உடையவராய் இருந்தார்.

அந்த இடத்திற்கு இராமரும் இலட்சுமணரும் வந்தார்கள். அனுமான் என்பவரால் அங்கே இராமருக்கும் சுக்கிரீவனுக்கும் அதிக சிநேகம் உண்டாய்விட்டது. அப்போது சுக்கிரீவன் இராமரைப் பார்த்து, 'இந்தவழியாகத்தான் இராவணன் சீதாபிராட்டியாரை எடுத்துக்கொண்டுபோனுன்' என்று சொன்னுன். பிராட்டியாரை மீட்டுதற்கு இராமருக்கு வேண்டிய உதவியைச் செய்கிறதாகவும் சுக்கிரீவன் சொன்னுன்.

அதன் பிறகு இராமர் வாலியைக்கொன்று சுக்கிரீவனைக் கிஷ்கிந்தைக்கு இராஜாவாக்கினார்.

## 8. அனுமார் இலங்கைக்குப் போகிறது.

சுக்கிரீவன் இராஜாவானதும் கார்காலக் கொடுமையால் இராமரை மறந்துவிட்டான். உடனே இராமருக்குக் கோபம் வந்தது.

பிறகு சுக்கிரீவன் பயந்து, தன்னை மன்னிக்கும்படி இராமரிடம் வந்து கேட்டுக் கொண்டான். இராமர் அப்படியே மன்னித்தார்.

பிறகு சுக்கிரீவன் தன்னுடைய வானரப் படைகளை நான்கு திக்குக்கும் அனுப்பிச் சீதாபிராட்டியாரைத் தேடச் செய்தான்.

வானரப் படைகள் நாலா பக்கங்களிலும் சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு போயின. அனுமாரும், வேறுசிலரும் சீதாபிராட்டியாரைத் தேடிக்கொண்டு தெற்கு நோக்கிப் போனார்கள். கடைசியாக அவர்கள் அனேக தூரங்கடந்து மகேந்திர மலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த மலையின் மேல் நின்று, அவர்கள் தெற்கே பார்த்தார்கள். முன்புறம் வெகு தூரத்தில், சமுத்திரத்தின் நடுவில் இருந்த

இலங்கை அவர் கண்ணுக்குத் தெரிந்தது. அங்கே எப்படிப்போவது என்று எல்லோரும் யோசனை பண்ணினார்கள். கடைசியாக அவர்கள் அனுமாரைப் பார்த்து, 'அனுமானே! நீர்தான் எல்லோருக்கும்மேல் பலசாலி; புத்திசாலி. ஆகையால் நீர்தான் இலங்கைக்குப் போகவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்கள். அனுமாரும் தைரியப்பட்டு அதற்குச் சம்மதித்தார்.

பிறகு அனுமார் அந்த மகேந்திர மலையின் மேல் ஏறி அங்கிருந்து ஒரு தாண்டுத் தாண்டி இலங்கை மத்தியில் போய்க் குதித்தார்.

இலங்கைக்குப் போனதும், அனுமார் சீதா தேவியைத் தேடாதஇடம் எல்லாம் தேடிப்பார்த்தார். பிறகு அவர் அசோக வனத்திற்கு வந்தார்.

அங்கே சிம்சுபா என்னும் மரத்தின் கீழ் ஒரு பெண்மணி உட்கார்ந்து கொண்டு 'இராமா! இராமா' என்று சொல்லி அழுதுகொண்டு இருந்தார். அந்தப் பெண்மணியைச் சுற்றிலும் இராட்சத ஸ்திரீகள் உட்கார்ந்து அந்தப் பெண்மணியைப் பார்த்து, 'இராவணனைக் கலியாணம் செய்து கொள்' என்று பயமுறுத்திக்கொண்டு இருந்தனர். "அந்தப் பெண்மணி யார் என்று தெரியுமா? அவர்தான் சீதாபிராட்டி. கொஞ்ச நேரத்தில் இராட்சசிகள் எல்லோரும் தூங்கி விட்டார்கள்.

அப்போது அங்கே ஒருத்தி தூங்காமல் விழித்துக்கொண்டு இருந்தாள். அவள் பெயர் திரிசடை. அவள் மட்டும் நல்லவள். அவள் இராவணனுடைய தம்பியாகிய விபீஷணர் என்பவரின் மகள். அவள் சீதையைப் பார்த்து, 'அம்மா! வருத்தப்படாதீர்கள். இராமர் வந்து இராவணனைக் கொன்று உங்களை அயோத்திக்கு அழைத்துக்கொண்டு போகிற மாதிரி நான் கனவு கண்டேன். என் கனவு கட்டாயம் பலிக்கும். இராமர் வருவார்! வருத்தப்படாதீர்கள்' என்று தேறுதல் சொன்னாள். பிறகு திரிசடையும் தூங்கிவிட்டாள்.

அப்போது, 'இப்படிக் கஷ்டப்படுகிறது ஏன்? இதைவிடச் செத்துப் போகிறது நல்லது' என்று சீதாதேவி நினைத்தார். உடனே சீதாதேவி தம் உயிரை விட்டுவிட எண்ணினார். எண்ணி, எண்ணியபடியே செய்துகொள்ள முயன்றார்.

---

ஆறும் அத்தியாயம்.

## 1. அனுமார் தேவியைக் காணுதல்.

---

அப்போது அனுமார், திடீரென்று தாம் இருந்த மரத்தில் இருந்து கீழே குதித்துச் சீதையின் காலில் விழுந்து கும்பிட்டார்.

சீதா தேவிக்குக் கொஞ்சம் பயம் உண்டாயிற்று. உடனே அனுமார் சீதா தேவியைப் பார்த்து, 'அம்மா! பயப்படவேண்டாம்! நான் தங்கள் கணவராகிய ஸ்ரீராமருடைய தூதன். நான் உங்களைத் தேடிக்கொண்டுதான் வந்தேன். உங்களைக் காணுமல் ஸ்ரீஇராமபிரான் துக்கப் பட்டுக்கொண்டு இருக்கின்ருர். இதோ நான் போய் நீங்கள் இங்கே இருக்கிறீர்கள் என்று அவர் இடம் சொல்லுகிறேன். அவர் உடனே இங்கு வருவார்; போர் தொடங்கி இராவணனைக் கொல்லுவார்; உங்களை அழைத்துக் கொண்டு போவார்' என்று சொன்னுர்.

பிறகு அனுமார் சீதாதேவி இடம் ஒரு மோதிரத்தைக் கொடுத்து, 'இது இராமருடைய மோதிரம். இதை அடையாளமாக உங்கள் இடம் கொடுக்கச் சொன்னுர்' என்று சொன்னுர்.

மோதிரத்தைக் கையில் வாங்கிய தேவியார் அதைக் கண்களில் ஒற்றிக்கொண்டார். பிறகு அனுமாரைப் பார்த்து, 'அப்பா! அனுமானே! நல்ல சமயத்தில் நீ வந்தாய்! உன்னைப்போல் உபகாரி வேறு யார் இருப்பார்கள்! நீ என்றைக் கும் சிரஞ்சீவியாய் இரு' என்று ஆசீர்வதித்தார்.

பிறகு அனுமார் தேவியைத் துக்கப்படாமல் இருக்கும்படி சொல்லவேண்டியவற்றைச் சொல் லிவிட்டு, அவர்கொடுத்த மோதிரத்தையும் வாங் கிக்கொண்டு அங்கே இருந்து புறப்பட்டார்.

## 2. இலங்கா தகனம்.

வெளியேவந்த அநுமார், சீதாதேவி இருந்த இடத்தை விட்டுவிட்டு மற்ற இடங்களை யெல்லாம் நாசம் செய்தார். மரங்களை எல்லாம் ஒடித்தார். வீடுகளை யெல்லாம் இடித்தார் இந்தச் சமாச்சாரம் இராவணனுக்குத் தெரிந்தது.

அவன் அநுமாரைப் பிடித்து வரும்படி அநேகம் இராட்சதர்களை அனுப்பினன். அவர்கள் அனைவரும் அநுமாரைப்பிடிக்கவந்தார்கள். அநுமார் அவர்களை எல்லாம் கொன்றுவிட்டார்.

பிறகு இராவணனுடைய மகனுகிய இந்திரஜித்து அங்கு வந்தான். அவன் பிர்ம்மாஸ்திரம் என்னும் ஒரு பாணத்தை விட்டு அநுமாரைக் கட்டினன். கட்டியபடியே அவன் அநுமாரை இராவணன் எதிரில் கொண்டுபோய் விட்டான்.

அப்போது இராவணன், அநுமாரைப் பார்த்து, 'அடே குரங்கே! நீ யார்? எங்கே வந்தாய்?' என்று கேட்டான்.

அதற்கு அநுமார் அவனைப் பார்த்து, 'அடே இராவண! நான் ஸ்ரீராமருடையதூதன். அடே நீ ஏன் சீதையைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு கஷ்டப்படுத்துகிருய்? அடே நீ கெட்டுப்போவாய்! பேசாமல் சீதையை ஸ்ரீராமரிடம் கொணர்ந்து விட்டுவிடு' என்று சொன்னர்.

அனுமார் மரியாதை இல்லாமல் பேசினதி னல் இராவணனுக்குக் கோபம் வந்து விட்டது. அதனுல் அவன் அனுமாரைக் கோபித்து அவரைக் கொல்லப் போனுன்.

அப்போது அவன் பக்கத்திலே, விபீஷணர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். அவர் இராவணனைப் பார்த்து 'அண்ணு! தூது வந்தவர்களைக் கொல்லலாமா? அப்படிக் கொல்வது மகா பாவம்' என்று நியாயம் சொன்னுர்.

பிறகு இராவணன் அனுமாரைக் கொல்லவில்லை. ஆனுல் அவருடையவாலில் துணியைச் சுற்றி, அதில் எண்ணெயை ஊற்றிக் கொளுத்தி விடும்படி உத்திரவிட்டான்.

உடனே இராட்சதர்கள் அனுமாருடைய வாலில், துணியைச் சுற்றி, எண்ணெயில் வாலை நனைத்துக் கொளுத்தி விட்டார்கள்.

இந்தச் சமாச்சாரம் சீதாதேவிக்குத் தெரிந்தது. நெருப்பு அனுமார் வாலைச் சுடாமல் இருக்கவேண்டும் என்று அவர் கடவுளை வேண்டிக் கொண்டார். அதனுல் நெருப்பு அனுமாரைச் சுடவில்லை. ஆனுல் அனுமார் என்ன செய்தார் தெரியுமா? எரிகிற வாலைக் கையில் பிடித்துக் கொண்டு தெருத் தெருவாகச் சுற்றினுர்; எல்லா வீடுகளையும் கொளுத்தினுர். பிறகு சமுத்திரத்தில்

வாலை நினைத்து நெருப்பை அவித்துவிட்டார். அவித்தவர் நேராகச் சீதாதேவியின் இடம்போய் மறுபடியும் உத்திரவு பெற்றுக்கொண்டு உடனே கிஷ்கிந்தைக்குப் புறப்பட்டார்.

## 3. இராமர் இலங்கைக்குப் போகிறது.

கிஷ்கிந்தா பட்டணத்திற்குப் போனதும் நடந்த சமாச்சாரத்தை ஒன்று விடாமல் அனுமார் எல்லோருக்கும் சொன்னார். அதைக் கேட்ட எல்லோரும் சந்தோஷப் பட்டார்கள்.

பிறகு இராமரும், இலட்சுமணரும், அனுமாரையும், சுக்கிரீவனையும், வாலியின் மகன் அங்கதனையும் தங்களோடு அழைத்துக்கொண்டு இலங்கை நோக்கிச் சென்றார்கள். ஏராளமானவானர சேனைகளும் அவர்களோடு புறப்பட்டார்கள்.

எல்லோரும் சேர்ந்து கடல் புரண்டு போகிறதுபோல் போனார்கள். அவர்கள் சமுத்திரக் கரைக்கு வந்து சேர்ந்தார்கள். சமுத்திரத்தில் இலங்கைக்குப் போக அணை கட்டினார்கள்.

அந்த அணையின்மேல் எல்லோரும் நடந்து இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே போய்ச் சேர்ந்ததும் அவர்கள், ‘சீதையைக்

கொண்டுவந்து விட்டுவிடு; இல்லாவிட்டால் சண்டைக்குவா' என்று அங்கதன் மூலம் இராவணனுக்குச் சொல்லி அனுப்பினார்கள்.

## 4. விபீஷணர் இராமரோடு சேருதல்.

இராவணன் தன்னுடைய சபையில் சிம்மாசனத்தில் உட்கார்ந்து கொண்டு இருந்தான். அப்போது இராமருடைய தூதன் அங்கதன் அங்கே வந்து இராமர் சொன்ன சமாச்சாரத்தை இராவணன் இடம் சொன்னான்.

இராவணன் அந்தச் சமாச்சாரத்தைக் காதில் வாங்காமல் தற்பெருமை கூறி, வந்த தூதனைக் கேவலமாகப் பேசி அனுப்பினான்.

தூதன் போன பிறகு இராவணனுடைய தம்பியாகிய விபீஷணர் என்பவர் இராவணனைப் பார்த்து, 'அண்ணா! வேண்டாம்; சீதையைவிட்டு விடு. இராம இலட்சுமணர்கள் சாமானியர் அல்லர். அவர்களைக்கொல்ல உன்னால் முடியாது. ஏன் வீண்சண்டை! சீதையை விட்டு விடு' என்று பலவிதத்திலும் புத்தி சொன்னார்.

இராவணன் அதைக் கேட்காமல் மமதை கொண்டு அவரைத் தூஷித்தான். அதனால் விபீஷணர் கோபித்துக்கொண்டு மனம் வெறுத்து இராமரோடு போய்ச் சேர்ந்துகொண்டார்.

அனுமார் விபீஷணர் நல்லவர் என்று சொன்னர். அதனல் இராமர் விபீஷணரோடு சிநேகம் கொண்டார்.

---

## 5. இராவணனைக் கொன்று, சீதையை மீட்டி, அயோத்திக்குப் போகுதல்

---

இராவணனுக்குக் கும்பகர்ணன் என்று ஒரு தம்பி இருந்தான். அவனும் நல்லவன் தான். சீதையை விட்டு விடும்படி அவனும் இராவணனுக்குச் சொன்னன். ஆனல், இராவணன் யார் பேச்சையும் கேட்கவில்லை.

ஆனல் கும்பகர்ணன் விபீஷணரைப்போல் இராமரோடு போய்ச் சேர்ந்து கொள்ள வில்லை. இராவணனேடு இருந்து விட்டான்.

பிறகு இராமருக்கும் இராவணனுக்கும் சண்டை ஆரம்பம் ஆயிற்று. சண்டை என்ருல் சாதாரண சண்டை அல்ல! அந்த மாதிரியான சண்டை எந்தக் காலத்திலும் நடந்ததே இல்லை. இலட்சுமணரோடு இராவணன் மகனகிய இந்திரஜித்து சண்டை செய்தான். இராமருடைய வானர சேனைகளோடு, இராவணனுடைய இராக்ஷத சேனைகள் சண்டை செய்தன! பலமான சண்டை; பார்ப்பதற்கும் பயமாயிருந்தது.

இந்திரஜித்து வெகுநேரம் இலட்சுமண ரோடு சண்டை செய்தான். அவரை ஜெயிக்க அவனால் முடியவில்லை. கடைசியாக அவன் தன்னிடம் இருந்த நாகபாசம் என்னும் பாணத்தை இலட்சுமணர் மேல் விட்டான். அதைத் தடுக்க இலட்சுமணரால் முடியவில்லை. அது அவரைக் கட்டித் தரையில் உருட்டி விட்டது! அதைக் கண்ட இராமர் கருடனை நினைத்தார். உடனே கருடன் வந்தது. கருடன் வந்தவுடன் இலட்சுமணரைக் கட்டியிருந்த நாகபாசம், அவரை விட்டு விலகிவிட்டது.

மறுபடியும் சண்டை பலமாய் நடந்தது. அப்போது இந்திரஜித்து ஒரு கொடிய பாணத்தை இலட்சுமணர் மேல் விட்டான். அது வந்து இலட்சுமணரைக் கீழேதள்ளி அவரைப் பேச்சு மூச்சு இல்லாதபடி செய்து விட்டது.

அதைக் கண்ட இராமர் துக்கப்பட்டார். 'தம்பி! இலட்சுமணா! இனிமேல் என்ன செய்வேன்' என்று அழுதார். அப்போது பக்கத்தில் இருந்தவர்கள், 'சுவாமி! துக்கப்படவேண்டாம். வடக்கே சஞ்சீவி மலை இருக்கிறது. அதைக் கொண்டுவந்தால்போதும். அதன் காற்று இலட்சுமணர் மேல் பட்டதும் அவர் எப்போதும் போல் எழுந்து விடுவார்' என்று சொன்னார்கள்.

உடனே அநுமார் 'இதோ நான் போய்க் கொண்டுவருகிறேன்' என்று சொல்லி ஒருதாண்டுத் தாண்டிக்கொண்டு புறப்பட்டார். கொஞ்ச நேரத்தில் அநுமார் சஞ்சீவிமலையை அடியோடு பேர்த்துக் கையில் எடுத்துக்கொண்டு வந்தார். அந்த மலையின் காற்று மயங்கிக் கிடந்த லட்சுமணரின் மேல் பட்டது.

இலட்சுமணர் தூங்கி எழுந்தவரைப்போல் எழுந்தார். அது வரைக்கும் துக்கப்பட்டுக் கொண்டு இருந்த இராமர் சந்தோஷப்பட்டார். எல்லோரும் அநுமாரைக் கொண்டாடினார்கள்.

இலட்சுமணர் இராவணனுடைய மகனாகிய இந்திரஜித்தைக் கொன்றார். கடைசியாக இராமர் இராவணனையும், கும்பகர்ணனையும், இன்னும் இராவணனோடு சேர்ந்து சண்டைக்கு வந்தவர்களையும் கொன்றுவிட்டார்.

விரோதிகள் எல்லோரும் ஒழிந்தவுடன் சீதையை இராமர் இடம் அழைத்துக்கொண்டு வந்தார்கள். சீதை நெருப்பில் முழுகி எழுந்து இராமரோடு சேர்ந்து சந்தோஷம் அடைந்தார்.

பிறகு இராமர் முன் கொடுத்திருந்த வாக்குப் படி இலங்கைக்கு அரசனாக இராவணனுடைய தம்பியாகிய விபீஷணரை நியமித்தார்.

இராவணன் இடம் புஷ்பகம் என்னும் ஒரு பெரிய ஆகாய விமானம் இருந்தது. அதில் இராமர், இலட்சுமணர், சீதை முதலிய எல்லோரும் ஏறிக்கொண்டு, ஆகாய மார்க்கமாக அயோத்திக்குப் போனார்கள்.

---

## 6. அனுமாரை அயோத்திக்கு அனுப்புதல்.

---

போகும் வழியில் இராமர் சீதையோடும், இலட்சுமணரோடும், இன்னும் மற்றவர்களோடும் பரத்துவாசர் என்னும் ஒரு ரிஷியின் ஆச்சிரமத்தில் தங்கினார். அந்த ரிஷி அவர்களுக்கு ஒரு பெரிய விருந்து நடத்த ஆரம்பித்தார்.

அப்போது இராமருக்குப் பரதர் நினைவு வந்தது. அதனால் அவர் காட்டுக்கு வந்து எத்தனை வருஷம் ஆயிற்று என்று கணக்குப் பார்த்தார். அன்றோடு பதினான்கு வருஷம் பூர்த்தி ஆயிற்று என்று அவருக்குத் தெரிந்தது.

உடனே அவர் அனுமாரை வரவழைத்து, 'அப்பா அனுமந்தா! நான் காட்டுக்கு வரும்போது, பதினான்கு வருஷத்தில் திரும்பி வருகிறேன் என்று தம்பி பரதனுக்குச் சொன்னேன். இன்றோடு பதினான்கு வருஷம் முடிந்துவிட்டது. இன்றைக்கு நான் வருவேன் என்று அவன் வழி

பார்த்து இருப்பான். என்னைக் காணவிட்டால் தன் உயிரை அவன் விட்டுவிடுவான். ஆகையால் நீ அயோத்திக்குப்போய் 'இராமர் பின்னால் வருகிறார்' என்று அவனுக்குச் சொல்' என்றார்.

அதைக்கேட்ட அனுமார், 'அப்படியே செய்கிறேன் சுவாமீ' என்று சொல்லி அங்கே இருந்து ஒரு தாண்டுத்தாண்டி ஆகாயமார்க்கமாக அயோத்திக்குப் புறப்பட்டார்.

---

## 7. பரதர்.

---

பரதர் என்ன செய்தார் தெரியுமா? இராமர் காட்டுக்குப் போனது முதல், நன்றாய்ச் சாப்பிட வில்லை. நல்ல துணியைக் கட்டவில்லை. படுக்கையில் படுக்கவில்லை. நன்றாகத் தூங்கவுமில்லை. 'இராமா! இராமா!' என்று தன் அண்ணனாகிய இராமரையே நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டு இருந்தார். இராமர் எப்போது வருவார் என்று ஒவ்வொரு நாளாக எண்ணிக்கொண்டு இருந்தார். பதினான்கு வருஷம் ஆயிற்று. இராமர் வரவில்லை.

அதனால் அவர், 'என் அண்ணனாகிய இராமர் பதினான்கு வருஷத்தில் வருவதாகச் சொன்னார். அவர் வரவில்லை. இனி நான் உயிரோடு இருக்கமாட்டேன்' என்று சொன்னார்.

உடனே பெரிய குழியை வெட்டி, அதில் விறகுகளை அடுக்கி, நெய்யை ஊற்றி நெருப்பை மூட்டச் சொன்னார். அவர் வார்த்தைக்குப் பயந்து வேலைக்காரர்கள் அப்படியே செய்தார்கள். நெருப்போ கொழுந்துவிட்டு நன்றாய்ப்பற்றி எரிந்தது. பரதர் குளித்து விட்டு மஞ்சள் துணியைக் கட்டிக்கொண்டு நெருப்பில்விழத் தயாராய் இருந்தார். அதைக் கண்ட எல்லோரும் கண்ணீர் விட்டு விசனப்பட்டார்கள்.

கடைசியாகப் பரதர் நெருப்பில் விழப் புறப்பட்டார். 'இராமா! இராமா!' என்று சொல்லிக் கொண்டே நெருப்பை மூன்று சுற்றுச் சுற்றி வந்தார். கடைசியில் நெருப்பில் விழவும் போனார்.

அப்போது அனுமார் அங்கேவந்து நெருப்பில் குதித்து அதை அணைத்துவிட்டார். அணைத்துவிட்டுப் பரதரைப் பார்த்து, 'இதோ இராமர் வருகிறார். அவர் பரத்துவாசருடைய ஆச்சிரமத்தில் இருக்கிறார். என்னை முன்னே அனுப்பிச் சமாசாரத்தைச் சொல்லச் சொன்னார். நான் அவருடைய தூதன்' என்று சொல்லி அனுமார் மற்ற விஷயங்களையும் சொன்னார்.

'இராமர் வருகிறார்' என்ற வார்த்தையைக் கேட்டவுடனே பரதர் சந்தோஷப்பட்டு அனுமாரை அப்படியே கட்டித் தழுவிக் கொண்டார்.

## 8. பரதர் அயோத்தியைச் சிங்காரித்தல்.

உடனே பரதர் இந்த விஷயத்தை அயோத்தியில் உள்ள எல்லோருக்கும் தெரியப்படுத்தினர். எல்லோரும் அதைக்கேட்டுச் சந்தோஷப்பட்டு, அயோத்திபுரிப்பட்டணத்தைத் தேவேந்திரனது லோகம்போல் சிங்காரித்தார்.

பரதர் அரண்மனையை நன்ருகச் சிங்காரிக்கும்படி சொன்னர். இராமர் வருகிருர் என்ற சந்தோஷத்தினுல், அவர் கண்ணில் பட்டவர்களை யெல்லாம். கையெடுத்துக் கும்பிட்டுக்கொண்டும், ஆடிப்பாடிச் சந்தோஷப் பட்டுக்கொண்டும் எதிர்பார்த்த வண்ணமாகவே இருந்தார்.

பிள்ளைகளே! பரதர் எப்படிப்பட்ட தம்பி என்று பார்த்தீர்களா? அவர்தான் இராமருக்கு நல்ல தம்பி என்றே கூறலாம்.

---

## 9. இராமர் அயோத்திக்கு வருதல்.

பரத்துவாசர் ஆச்சிரமத்தில், இராமர் விருந்துசாப்பிட்டுவிட்டு எல்லோரையும் அழைத்துக்கொண்டு அயோத்திக்குப் போனர்.

இராமரைக் கண்டதும் பரதர் ஓடிவந்து, ‘அண்ணு! அண்ணு!’ என்று கட்டிக்கொண்டார். வசிஷ்டரையும், மற்ற பெரியவர்களையும் இரா

மர் வணங்கினார். சத்ருக்ணர் இராமர் காலில் விழுந்து கும்பிட்டார். இராமர் அவரை எடுத்து மார்போடு அணைத்துச் சந்தோஷப்பட்டார்.

பரதரும், சத்ருக்கணரும், அவர்கள் மனைவி மாரும் சீதையைக் கும்பிட்டார்கள், சீதாதேவி அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்தார்.

பிறகு ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் வந்து இராமரையும், சீதையையும் கண்டு, கும் பிட்டுச் சந்தோஷப்பட்டுப் போனார்கள். எல்லோ ருக்கும் அளவில்லாதசந்தோஷம் உண்டாயிற்று.

---

## 10. இராமர் பட்டாபிஷேகம்.

ஒரு நாள் நல்லவேளையில் இராமருக்குப் பட்டாபிஷேகம் செய்தார்கள். அப்போது சீதா தேவியார் இராமரின் பக்கத்தில் உட்கார்ந்து இருந்தார். பரதர் இராமருக்கு வெள்ளைப் பட் டால் செய்த குடை பிடித்தார். இலட்சுமணரும், சத்ருக்ணரும் இராமருக்கு வெண்சாமரை வீசி னார்கள். அனுமார் இராமர் இருந்த சிம்மாசனத் தைத் தாங்கிக்கொண்டு இருந்தார். அங்கதன் வாளைப் பிடித்துக்கொண்டு நின்றான். திருவெண் ணெய் நல்லூர் சடையப்ப முதலியாரின் பரம் பரையார்கள் நவரத்தினங்களால் செய்த திரு முடியை எடுத்து வசிஷ்டர் கையில் கொடுத்தார்

கள். வசிஷ்டர் அந்தத் திருமுடியை வாங்கித் தமது இருகரத்தாலும் இராமர் தலையில்வைத்தார்.

அப்போது எல்லோரும் சந்தோஷப் பட்டார்கள். தேவர்கள் சந்தோஷப்பட்டு இராமரின் மேல் பூ மழை பெய்தார்கள்.

பரதர் உடனே பட்டுத் துணிகளையும், பொன் நாணயங்களையும் எடுத்து எடுத்து ஓயாமல் ஊரில் உள்ள ஜனங்களுக்குக் கொடுத்தார். எல்லோரும் சந்தோஷம் அடைந்தார்கள்.

பிறகு இராமர் வெகுகாலம் வரையில் அயோத்திக்கு அரசராய் இருந்து மிக அன்போடு ஜனங்களைக் காப்பாற்றி வந்தார்.

---

## முடிவு.

இவ்விதம் அன்பானந்தர் சொன்னதைக் கேட்டுக்கொண்டு இருந்த சிறுவர்கள் சந்தோஷப்பட்டார்கள். அப்போது அவர்களில் ஒருவன், 'தாத்தா! நீங்கள் சொன்ன விஷயம் நல்ல விஷயம்' என்று சொன்னான்.

அதைக்கேட்ட அன்பானந்தர் பிள்ளைகளைப் பார்த்து, 'பிள்ளைகளே! நீங்கள் பரதரைப் போல உங்கள் அண்ணன்மார்கள் இடத்திலும், இராமரைப்போல உங்கள் தம்பிமார்கள் இடத்திலும் பட்சமாய் இருக்க வேண்டும். கெட்ட

எண்ணம் ஒருபோதும் கூடாது. கெட்டவனாகிய இராவணன் எப்படி ஆனான் பார்த்தீர்களா! ஆகையால் நீங்கள் எப்போதும், நல்லவர்களாய் இருக்கவேண்டும்' என்று சொன்னார்.

அதைக்கேட்ட பிள்ளைகள், 'தாத்தா! நீங்கள் சொன்னபடியே நாங்கள் நடக்கிறோம்' என்று சந்தோஷமாகச் சொன்னார்கள்.

அதற்கு அந்தப் பெரியவர், 'நல்லது நீங்கள் வந்து நெடுநேரம் ஆய்விட்டது. இப்போது வீட்டுக்குப்போய், இன்னொரு நாளைக்கு வாருங்கள். அப்போது இன்னும் ஏதாவது நல்ல விஷயங்கள் சொல்லுகிறேன்' என்றார்.

அதற்கு அந்தப் பிள்ளைகள், 'அப்படியே ஆகட்டும் தாத்தா!' என்று சொல்லி அவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் வீடு நோக்கிப் போனார்கள்.

பெரியவரும் பிள்ளைகளுக்கு அன்போடு உத்திரவுகொடுத்துவிட்டு வீட்டிற்குள் போனார்.

பாலர் இராமாயணம்

இரண்டாம் பாகம் முற்றிற்று.

THE MADURAI TAM
DR

மதுரை, புத்தக வியாபாரம்

# இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் வெளியிட்ட

# தமிழ்ப் புத்தகங்கள்.

*துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.*

---

புதிய பாடப் புத்தகங்கள்:— *இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனுமுறைக் கிணங்க சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணிசாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும், சிறந்த தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளன.*

| | |
|---|---|
| புதிய முதல் பாடம் | 0—2—0 |
| புதிய இரண்டாம் பாடம் | 0—3—0 |
| புதிய மூன்றாம் பாடம் | 0—3—6 |
| புதிய நான்காம் பாடம் | 0—4—6 |
| புதிய ஐந்தாம் பாடம் | 0—6—0 |

---

## நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

| | | |
|---|---|---|
| **உலகநீதி** | நீதிவாக்கியக் கதைகள் | 0—2—0 |
| **ஆத்திசூடி** | நீதிவாக்கியக் கதைகள் | 0—2—6 |
| கொன்றைவேந்தன் | நீதிவாக்கியக் கதைகள் | 0—2—0 |
| வெற்றிவேற்கை | நீதிவாக்கியக் கதைகள் | 0—3—[illegible] |
| **மூதுரை** | நீதிவாக்கியக் கதைகள் | 0—5—0 |
| **நல்வழி** | நீதிவாக்கியக் கதைகள் | 0-10—0 |

*ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணாக்கர்கள் நெட்டுருக் கொண்டு பதவுரை, கருத்துரைகளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங் கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத் தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கண்மேல் பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறு எழுதப் பெற்றுள்ளன. நல்லொழுக்கப் போதத்திற்கும் இவை நற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். காம்போஸிஷன் என்னும் பாலஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.*

---